செய்தி வெளியீடு எண்.111 நாள். 16.2.2009

# அடித்தள மக்களின் வாழ்வில் தொடர்ந்து ஒளி ஏற்றும் நிதிநிலை அறிக்கை!

## மத்திய அரசின் 2009 – 2010 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை குறித்து முதலமைச்சர் கலைஞர் பாராட்டு!

**மத்திய நிதி அமைச்சர் பொறுப்பை வகிக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் 2009–2010 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை அளித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஐந்தாண்டு சாதனைகளைப் பட்டியலிட்டுள்ளார். குறிப்பாக 3 கோடியே 60 இலட்சம் விவசாயிகளுக்கு 65 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான விவசாயக் கடன்களை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ரத்து செய்தது குறித்தும், விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்களை 2 இலட்சம் கோடி ரூபாய் அளவில் அதிகப்படுத்தியது குறித்தும் மற்றும் பல்வேறு நலத்திட்டங்களில் அரசின் சாதனைகள் குறித்தும் விளக்கினார். இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை, சாலைகள் போன்ற முக்கியமான வளர்ச்சித் துறைகளுக்குக் கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். குறிப்பாக தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு 30 ஆயிரத்து 100 கோடி ரூபாயும், அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு 13 ஆயிரத்து 100 கோடி ரூபாயும், சத்துணவுத் திட்டத்திற்கு 8 ஆயிரம் கோடி ரூபாயும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கு 11 ஆயிரத்து 842 கோடி ரூபாயும், பாரத் நிர்மாண் திட்டத்திற்கு 40 ஆயிரத்து 900 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளார். பொருளாதாரத் தேக்கச் சூழ்நிலையில் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அடித்தள மக்களின் வாழ்வில் தொடர்ந்து ஒளி ஏற்றி வைக்கும் நிதிநிலை அறிக்கையாக இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை விளங்குகிறது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.